[1975 நவம்பர் 7

பொருட்டு கும்முடிப்பூண்டி வட்டத் தலைநகரில் வட்ட அரசினர் மருத்துவ மனை அமைப்பதற்கு முன்னுரிமை தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 'முன்னுரிமை' என்ற சொல்லைப் பயன் படுத்தியதை வரவேற்கிறேன். இதற்கு முன்பே வட்டத் தலை நகரான இடங்கள் சில இருக்கின்றன. அந்த முன்னுரிமைப்படி எப்பொழுது நிதி கிடைக்கிறதோ அப்பொழுது கவனிக்கப் படும்.

வேடந்தாங்கல் மருத்துவ மனைக்கு மானியம்

* 230 வினு—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் வேடந்தாங்கல் கிராமத்தில் Service International Organisation நடத்தும் மருத்துவ மனைக்கு மானியம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

* 231 வினு—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம், தரங்கம்பாடி பகுதிக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அப்பேரூராட்சி மன்றத்திலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.